**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி.**
**அசல் வழக்கு எண்.195/2015**

2025–ஆம் ஆண்டு ஜுன் மாதம் 27–ம் நாள் வெள்ளிக்கிழமை சாட்சியின் வாக்குமூலம், 2023–ஆம் ஆண்டு பாரதிய சாஷ்சிய அதிநியம் பிரிவுகளின் விதிமுறைகளின்படி திரு. மா.சந்திரமோகன்.,பி.ஏ., பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி, அவர்களால் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பிரமாணம் செய்விக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| தேதி: | 27.06.2025 | கணவர் பெயர்: | மதிவாணன் |
| பெயர்: | கலாவதி<br>(PW-1 Cross ) | தாலுக்கா: | சீர்காழி |
| கிராமம்: | அரூர் | சமயம்: | |
| தொழில்: | | வயது : | 30/2025 |

<u>**2–ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை : 27.06.2025**</u>

1. நான் பாகப்பிரிவினை பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன். எனது மாமனார் பெயர் சுப்பரமணியன். தாவாசொத்துக்கள் 1, 2, 3 அயிட்ட சொத்துக்கள் எனது மாமனாருக்கு சொந்தமானது என்றால் சரிதான். தாவா 4,5 அயிட்ட சொத்துக்கள் எனது கணவர் மதிவாணன் பெயரிலும் 2–ம் பிரதிவாதி மணிமொழி பெயரிலும் சேர்ந்து வாங்கப்படடது என்றால் சரிதான். 26.09.1962–ல் முனியாண்டி, முனியான்டி மகன்கள் தங்வேலு, சுப்பரமணிய்ன ஆகிய மூவருக்கும் இடையே பாகப்பிரிவினை ஏற்பட்டு அதன்படி தாவா 1, 2,3 அயிட்ட சொத்துக்கள் சுப்பரமணியனுக்கு ஒதுக்கபபட்டது என்றால் சரிதான். சுப்பரமணியனுக்கு 1,2,3, 4 பிரதிவாதிகளும் மற்றும் 1–வது வாதி மதிவாணனும் வாரிசுகள் என்றால் சரிதான்.

2. வழக்கு 1 முதல் 3 அயிட்ட சொத்துக்கள் எனது மாமனார் சுப்பரமணியன் 2–ம் பிரதிவாதி மணிமொழிக்கு 05.07.2007–ல் பதிவு செய்யப்பட்ட உயில் எழுதி வைத்துள்ளார் என்றால் சரியல்ல. எனது மாமனார் அவரது மகளான 4–ம் பிரதிவாதி மகேஷ்வரிக்கு அவரது செலவில் திருமணம் செய்து வைத்தார் என்றால் சரிதான். அதேபோல் மணிமொழியை தவிர மற்ற மகன்களுக்கும்

திருமணம் செய்து வைத்து அவர்கள் நல்லமுறையில் இருக்கிறார்கள் என்றால் சரிதான். மணிமொழி சுப்பரமணியன் அவர்களின் மைத்துனர் மகளை திருமணம் செய்துகொண்டார் என்றால் சரிதான். அதனால்தான் மற்ற மகன்களளுக்கு செய்ததுபோல மணிமொழிக்கு திருமணத்தின் போது எந்த சிறப்பும் செய்யவில்லை என்றால் சரிதான். அதனால்தான் உயில் கண்ட பாகப்பிரிவினை மூலம் கிடைக்கப்பெற்ற தாவா 1,2 அயிட்ட சொத்துக்களையும், தனது சொந்த உழைப்பால் பெறப்பட்ட 3, 4 அயிட்ட சொத்துக்களையும் மணிமொழிக்கு சுப்பரமணியன் உயில் எழுதி வைத்தார் என்றால் சரியல்ல.

3. உயிலில் கண்ட புல எண்.8/1 சொத்து சம்மந்தமாக பாகப்பிரிவினை ஏதும் கேட்டுள்ளேனா என்றால் கேட்டுள்ளேன். தாவா 1–வது அயிட் ட சொத்து புல எண்.31/5–ல் உள்ள 0.03.0 ஏர்ஸ் முழுவதும் 2–ம் பிரதிவாதி மணிமொழி வெங்கடகிருஷ்ணன் என்பரிடம் கிரயம் செய்து கொடுத்துள்ளார் என்றால் நாங்கள் வழக்கு போட்ட பிறகு தான் கிரயம் செய்து கொடுக்கப்பட்டது. தாவா 1–வது அயிட் டசொத்தை உயிலில் எழுதி இ ருந்ததால்தான் 2–ம் பிரதிவாதி மணிமொழி அதை வெங்கடகிருஷ்ணனுக்கு கிரயம் செய்து கொடுத்தார் என்றால் சரியல்ல. மேற்கண்டவாறு கிரயம் செய்து கொடுத்தற்கு எதிராக நான் ஏதேனும் நடவடிக்கை எடுத்தேனா என்றால் நான் முன்பே வழக்கு தாக்கல் செய்து விட்டேன்.

4. உயிலில் கண்ட 1,2 வது அயிட்ட சொத்துக்களை பொறுத்து பாகப்பிரிவினை மூலம் கிடைத்த சொத்துக்ககளை தான் உயில் எழுதப்பட்டது என்றும், அதில் சர்வே எண் தவறாக உள்ளது நான்கெல்லையும், விஸதீரணமும் சரியாக உள்ளது என்றால் சரியல்ல. இந்த 2–ம் பிரதிவாதி கூடுதல் எதிர்வழக்குரை தாக்கல் செய்த பிறகு அதில் கண்ட உயில் சம்மந்தமாக வேறு ஏதேனும் நடவடிக்கை எடுத்துள்ளேனா என்றால் இல்லை. உயில் படி கிடைத்த தாவா 1, 2,3–வது அயிட்ட சொத்துக்களை தனது பெயரில் 2–ம் பிரதிவாதி பட்டா மாற்றியுள்ளார் என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. தாவா 4, 5., 6 அயிட் டசொத்துக்களில் இந்த 2–ம் பிரதிவாதிக்கு 1/2 உரிமை

உள்ளது என்றால் சரிதான். 4, 5 அயிட்ட சொத்துக்களில் உள்ள மின் இணைப்பிலும் ½ பாகம் உள்ளது என்றால் அது பொது சொத்து அதனால் இருவருக்கும் பாகம் உண்டு.

5. தாவா 4, 5, 6 அயிட்ட சொத்துக்களில் ½ பாகம் உள்ளது என்பதால் அதற்குரிய நீதிமன்ற கட்டணத்தை 2–ம் பிரதிவாதி செலுத்தியுள்ளார் என்ற விபரம் தெரியுமா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. தாவா 1, 2, 3 அயிட்ட சொத்துக்களை பொறுத்து எனது மாமனார் 2–ம்பிரதிவாதிக்கு உயில் எழுதி வைத்துள்ளபடியால் அவர்தான் முழு உரியாளர் என்றும் அதனால் மற்ற யாருக்கும்அதில் பாகம் கிடையாது என்று சொன்னாலும் சரியல்ல. எனவே தாவா 1,23, அயிட்ட சொத்துக்களை பொறுத்து இந்த வழக்கு தள்ளுபடி செய்ய வேண்டும் என்றும், 4, 5, 6 அயிட்ட சொத்துக்கள் 2–ம் பிரதிவாதி மணிமொழிக்கு ½ பாகம் பிரிக்கப்பட வேண்டும் என்றாலும் சரியல்ல.

2–ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை முடித்துக்கொள்ளப்படுகிறது.